REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 5உ வெள்ளி (18—1—57) ★ ★ வெளியீடு: தை 6உ சனி (19—1—57) [இதழ் 190

படுமோசம்! அப்பட்டமான 'காப்பி'!

★

"சினிமாப் படங்கள் தயாரிப்பதில் இந்தியா உலகில் இரண்டாவதாக இருக்கிறது; ஆனால், இந்தியாவில் தயாரிக்கப்படும் படங்கள் படுமோசமாயிருக்கின்றன. ஹாலிவுட் படங்களின் அப்பட்டமான 'காப்பி'யாயிருக்கின்றன" என்று, திருமதி விஜயலட்சுமி பண்டிட் தனது கானடா விஜயத்தின்போது பத்திரிகையாளரிடம் கூறினாராம்!

தமிழ் நாட்டில் இந்தி கட்டாய பாடமாகும்

'பச்சைத் தமிழ'ருக்கு எதிர்ப்பு வலுக்கிறது!

காமராசர் சர்வாதிகாரமாக நடப்பதாகக் குற்றச்சாட்டு

மதுரையில் கூட்டம் கூட்டமாகக் காங்கிரஸ்காரர்கள் கட்சிக்குத் தலைமுழுக்கு

மதுரை, ஜன, 17—

மதுரை மாவட்ட நாட்டாண்மைக் கழகத்தில் உள்ள 43 காங்கிரஸ் உறுப்பினர்களில் 24 பேர்கள், தேர்தல் அபேட்சகர் பட்டியல் கண்டு அதிருப்திகொண்டதால் காங்கிரசிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர் என்று தெரிகிறது.

மாவட்டக் கழகத் தலைவராக இருக்கும் எம் எஸ் சிக்கராயர் உட்பட 24 உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியில் தங்களுக்குள்ள சாதாரண உறுப்பினர் பதவியிலிருந்துகூட விலகிக் கொள்வதாகக் காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்கு அறிவித்துள்ளனராம்.

சர்வாதிகாரம்

தேர்தலுக்கு அபேட்சகர் பொறுக்குவதில், காமராசர் சர்வாதிகாரமாக நடந்துகொண்டிருப்பதாக அவர்கள் தங்கள் இராஜிநாமாவில் குறிப்பிட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

மாவட்டக் கழகத் துணைத் தலைவரும் இராஜிநாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது.

உடுமலையில்

உடுமலைத் தொகுதிக்கு தனக்கு டிக்கட் கிடைக்கவில்லை என்ற அதிருப்தியாலும், மௌன குருசாமி நாயுடு என்பவருக்கு காங்கிரஸ் டிக்கட் தரப்பட்டது என்பதாலும், தான் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாக 'கோர்ட்டார் அப்பன்' என்கிற என். டி. சுப்பையா கவுண்டர் தெரிவித்திருக்கிறார்.

பச்சைத் தமிழருக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் எதிர்ப்பு வலுத்துக்கொண்டு வருகிற செய்திகள் தினம் வெளிவருகின்றன.

மூன்று மொழிப் பாடத் திட்டத்தை மாநிலங்கள் ஏற்க வேண்டுமாம்

மத்தியக் கல்வி ஆலோசனைக் குழு சிபாரிசுகளை டெல்லி தயங்காமல் அமுல் செய்யுமாம்

புதுடில்லி, சன. 17—

உயர்நிலைப் பள்ளியில் கல்வி பெறும் மாணவர்கள் மூன்று மொழிகளைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும். ஒன்று—தாய் மொழி அல்லது வட்டார மொழி; இரண்டாவது—இந்தி; மூன்றுவது—ஆங்கிலம்; இந்த மூன்று மொழிகளையும் கட்டாயமாகக் கற்கவேண்டும்.

இப்படி ஒரு ஆலோசனையை, மத்திய கல்வி ஆலோசனை போர்டு தனது 24-வது கூட்டத்தில் டில்லி சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

இந்த மத்திய கல்விக் கொள்கையை ஏற்று அமுல் நடத்துமாறு எல்லா மாநில சர்க்கார்களையும் டில்லி சர்க்கார் கேட்கவேண்டும் என்றும், அப்போதுதான் கல்வி முறையில் ஒரு 'அகில இந்தியக் கொள்கை'யை உருவாக்க முடியும் என்றும் போர்டு கூறியிருக்கிறதாம்.

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் வேறு ஒரு இந்திய மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும், இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் கட்டாயம் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஆலோசனைகளை டில்லி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லையாம்.

1957-ம் ஆண்டில், ஐ. நா. சபையில் சீன இடம் பெற்றுவிடும் என்று தாங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகச் சூ-என்லாய் கூறினார்!

காமராசரை வீழ்த்த மேலிடம் முடிவு?

சுப்பிரமணியம் டெல்லிக்கு அழைக்கப்பட்ட காரணம் என்ன?

தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் நெருக்கடி

(நமது அரசியல் நிருபர்)

சென்னை, சன. 18—

தமிழ்நாட்டில், காங்கிரஸ் கட்சி சார்பில் தேர்தலுக்கு நிற்பதற்கெனப் பொறுக்கப்பட்டுள்ள அபேட்சகர் பட்டியல் வெளியானதிலிருந்து, கூட்டம் கூட்டமாகக் காங்கிரசிலிருந்து எண்ணற்றோர் வெளியேறி வருவதையும், பலர் தங்களுக்குத் தரப்பட்ட கட்சி 'டிக்கட்' தேவை இல்லை என உதறி எறிந்திருப்பதையும், பட்டியல் பலருக்கு அதிருப்தி தந்திருப்பதாக வெளிப்படையாகவே அறிக்கைகள் விடுத்திருப்பதையும், காமராசர் சர்வாதிகாரமாக நடந்துகொள்வதாகக் காங்கிரசார் குற்றம் சாட்டியிருப்பதையும், ஏற்கனவே காமராசர் மீதுள்ள பல குற்றச்சாட்டுகளையும் பின்னணியாக வைத்துக்கொண்டு காமராசரை கட்சி ஆதிக்கத்திலிருந்து தனிமைப்படுத்த மேலிடம் முடிவு செய்துள்ளதின் நிதர்சனமான காட்சிதான், நிதி மந்திரி சுப்பிரமணியம் டில்லிக்கு அழைக்கப்பட்டிருப்பது என்று, காங்கிரசில் உள்ள நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் தருகின்றன.

காமராசர் இருக்கும்போது சுப்பிரமணியம், தேபரால் டில்லிக்கு அழைக்கப்படுவதற்கு இதைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாதென்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நிதிமந்திரி சுப்பிரமணியம் இன்று காலை டில்லிக்குப் புறப்படுகிறார் என்ற செய்தி, ஏற்கனவே காங்கிரஸ் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஊட்டியிருக்கிறது.

காங்கிரஸ் கட்சிக்குப் புதிய இரத்தம் பாய்ச்சுவது என்ற பெயரால், எண்ணற்ற தகுதியற்றவர்களுக்கு, தேர்தலில் 'காங்கிரஸ் டிக்கெட்' தரப்பட்டிருப்பதே காமராசர் மீதுள்ள பிரதான குற்றச்சாட்டு என்றும் கூறப்படுகிறது

பச்சைத் தமிழர் தமக்கு வழங்கிய டிக்கட்டுகளையே பலர் வேண்டாம் என்று உதறி எறிந்திருப்பதானது, வெறும் கோஷ்டி மனப்பான்மையினால் மட்டும் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்பதையும், பொதுவாகவே காங்கிரசின் பெயரால் நிறுத்திவைக்க அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கக் கையாளப்பட்ட முறையே பலருக்குப் பிடிக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காமராசருக்கும் பொதுவாகக் காங்கிரசுக்கும், தமிழ் நாட்டில் பெரும் நெருக்கடி தோன்றியிருக்கின்றதெனறே அந்த வட்டாரங்கள் நிலைமையை வருணிக்கின்றன.

சங்கரலிங்கனாரைப் பின்பற்றி!

சங்கு கணேசன் உண்ணாவிரதம்

சென்னை, சன. 18—

பழம்பெரும் காங்கிரசுக்காரரான சங்கு கணேசன் அவர்கள், தமிழ் நாடு எனத் தாயகத்திற்குப் பெயரிடக்கோரி, உண்ணாவிரதமிருந்து உயிர்த் தியாகம் புரிந்த சங்கரலிங்கனாரைப் பின்பற்றி நேற்று சென்னையில், சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கியுள்ளார்.

நேற்று காலை 8·30 மணியளவில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதிகோவில் முன்பாக அவர் உண்ணா விரதத்தைத் தொடங்கியுள்ளார்.

'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்ற பெருவாரியான தமிழ் மக்களின் கோரிக்கையை சர்க்கார் ஏற்காதவரை உண்ணாவிரதத்தைக் கைவிட மாட்டேன என்று அவர் அறிவித்துள்ளார்.

எஸ். எஸ். இராசேந்திரன் நாடக மன்றத்தினர் கார் விபத்து

எவருக்கும் பலத்த காயங்களில்லை

நடிகமணி நாராயணசாமி தரும் முழு விவரங்கள்

எஸ். எஸ். இராசேந்திரன் நாடக மன்றத்தினருக்கு ஏற்பட்ட கார் விபத்து பற்றிய முழு விவரங்களை நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் தந்திருக்கிறார்கள்.

சில இதழ்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளபடி, தோழர் நாராயணசாமி அவர்களுக்கோ, நாடக மன்றத்தைச் சேர்ந்தவர்களுக்கோ பலத்த காயம் ஏதும் இல்லை. நாராயணசாமி அவர்கள் சிறு காயம்கூட ஏதுமின்றித் தப்பியுள்ளார் என்ற தகவலையும் தருகிறோம்.

நாடகம்

16-1-57 அன்று இரவு காஞ்சியில் நடைபெறவிருந்த 'மணிமகுடம்' நாடகத்திற்காக இராசேந்திரன் நாடக மன்றத்தினர், மன்ற 'வான்' ஒன்றில் சென்று கொண்டிருந்தனர்; தோழர் டி. வி. நாராயணசாமி அந்த வண்டியில் இருந்தார். எஸ் எஸ். இராசேந்திரன் அவர்கள் அதில் செல்லவில்லை; அவ்வண்டிக்குப் பின்னாலேயே தனியாகத் தனது மோட்டார் காரில் காஞ்சிக்குச் சென்றுகொண்டிருந்தார்.

விபத்து

முன்னால் சென்ற வான், காஞ்சியிலிருந்து 7-மைல் தொலைவில் சேவடல் என்னும் கிராமத்திற்கு அருகில் 'டயர்' ஒன்று வெடித்ததினால், டிரைவர் வண்டியை நிறுத்துவதற்குமுன் சாலை ஓரமாகக் குடை

(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

சாய்ந்தது. வண்டிக்குள்ளிருந்தவர்கள், அதனால் வெளியே தூக்கி எறியப்பட்டனர்; அவர்களில் ஆறு பேர்களுக்கு மட்டும் சிறு காயங்கள் ஏற்பட்டன. எவருக்கும் பலமான காயங்கள் ஏற்படவில்லை.

அண்ணா வந்தார்

விபத்து பற்றிய செய்தி, காஞ்சியில் அண்ணா அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதும், அண்ணா அவர்களும், மற்றும் நகரசபைத் தலைவர் பெருமாள் அவர்களும், இதர நகரப் பிரமுகர்களும முதலுதவிக்கான ஏற்பாடுகளுடன் விபத்து நடைபெற்ற இடத்திற்கு அரை மணி நேரத்திற்குள் விரைந்து வந்து, சகல உதவிகளும் வசதிகளும செய்தனர்.

மருத்துவமனையில்

சிறு காயம்பட்ட ஆறு நடிகர்களும காஞ்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தகுந்த சிகிச்சையினால் வேகமாகக் குணமாகிவருகின்றனர்.

காஞ்சியில் 16-ந் தேதி நடைபெறுவதாக இருந்த நாடகம், இன்று 18-ந் தேதியன்று நடைபெறும்.

விபத்து செய்தி கேட்டுத் திடுக்கிட்ட தோழர்கள், பரபரப்படையத் தேவையில்லை என்றும் நடிகமணி டி. வி. நாராயணசாமி வேண்டிக்கொள்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—1—'57 வெள்ளி

ஊழல்கள் ஒழிய!

ஊழல்! ஊழல்!! எங்கும், எதிலும் ஊழல்!!! 'பஞ்சசீலம்' பேசும் பண்டிதர் ஆட்சியில், ஊழல் பெருக்கெடுக்காத துறையே இல்லை; நாற்றமடிக்காத நிர்வாக இலாகாவே இல்லை. இந்த உண்மையை, சர்க்கார் வரவு-செலவு கணக்குகளைத் தணிக்கை செய்கிற அதிகாரிகள் ஆண்டுதோறும் வெளியிட்டுவரும் அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

வெளி விவகார இலாகா, பாதுகாப்பு இலாகா, உள்நாட்டு இலாகா, செய்திப் போக்குவரத்து இலாகா, தபால்-தந்தி இலாகா, இரயில்வே இலாகா, வருமான வரி இலாகா, திட்ட இலாகா— இப்படி டில்லியின் நிர்வாகத்தில் உள்ள எந்த இலாகாக்களை எடுத்துக்கொண்டாலும், அவற்றில் இலஞ்சம், மோசடி போன்ற பயங்கரமான—சமூக விரோதமான ஊழல்கள், திறமைக் குறைவு, காலத்தை வீணாக்கும் போக்கு போன்ற தவிர்க்கக்கூடிய ஊழல்கள் என்று பலதரப்பட்டவை தலைதூக்கி நிற்பதைக் காண்கிறோம்.

டில்லியின் இலாகாக்களும் அவற்றிற்கான மந்திரிகளின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே செல்வது போல, இலாகாக்களில் ஊழல்களின் எண்ணிக்கையும் வகையும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன.

பண்டிதருக்குப் 'பெருமை' தேடித் தரத்தக்கப் பிரசித்தி பெற்ற ஊழல்கள்—உர பேர ஊழல், ஜீப் கார் ஊழல், தற்காப்பிலாகா ஊழல், நங்கல் திட்ட ஊழல்கள், பண்டித ராட்சியின் — காங்கிரசாட்சியின் நிர்வாகத் திறனுக்குத் தெளிவான எடுத்துக் காட்டுகளாகும்!

இந்த நிலையில், ஊழல்களின் வகை மேலும் வளர்கிறது என்பதை விளக்கும் வகையில், 'முதல் திட்டத்தில், போதிய முன்யோசனையுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்படாததால், நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களில் பாதிக் கட்டத்தில் பல மாறுதல்கள் செய்ய வேண்டியிருந்தது; அனாவசியமான காலதாமதமும் பணச் செலவும் ஏற்பட்டன' என்று இராகுட் அணையில், திட்ட மந்திரி குல்சாரிலால் நந்தா கூறியிருக்கிறார்.

முன்யோசனை இல்லாமல் திட்டம் தீட்டினார்களாம்! வேடிக்கையைப் பாருங்கள்!

திட்டமிடுதல் என்றாலே, விரும்புகிற ஒரு காரியத்தை முன்கூட்டியே யோசனை செய்து, தேவைப்படும் பொருள்களையும் உபகரணங்களையும் கணக்கிட்டு, குறைந்த செலவில் தரம் குறையாமல் செய்து முடிப்பதற்கான வழி என்பது பொருள். ஆனால், அமைச்சரோ, 'முன்யோசனையின்றித் திட்டமிட்டோம்' என்கிறார். இந்த அமைச்சருக்குத் திட்டமிடுதல் என்றாலே முன்கூட்டியே யோசித்தல் என்ற பொருளே தெரியாமல் போய்விட்டதா?

இவரைத்தான் திட்ட மந்திரியாக ஏற்றுக்கொண்டிருக்கிறது, டில்லி தர்பார். வேடிக்கையான மனிதர்கள் கூடி, வேதனைதரும் ஆட்சி நடத்துகிறார்கள். இந்தக் காட்சியைச் சகித்துக்கொண்டுதான் இருக்கிறோம், இன்னும்.

இவர்களது முன்யோசனை இல்லாமைக்கு, மக்கள் தருகிற வரிப் பணம் கோடி கோடியாக விரயமாகிறது. இவர்கள் பாழடிக்கும் பணம் பெறப்பட்ட முறையை ஒரு கணம் எண்ணினால், இதயம் குமுறும்—இரத்தம் கொதிக்கும்—கண்கள் கனல் கக்கும்.

பகல் — பதைபதைக்கும் வெயில்! பாரவண்டியை முன்னிருந்துகொண்டு இருவர்—மனிதர்கள், மாடுகளுக்குப் பதிலாக இழுக்கின்றனர், முக்கி முனகிக்கொண்டு, விழிபிதுங்க, முதுகெலும்பு ஒடிய, கொப்பளிக்கும் கால்கள் முறிய, குருதி வியர்வையாகக் கசிய; பின்னிருந்து இருவர் தலையால் முட்டித் தள்ளுகின்றனர், அந்த வண்டியை நகர்த்த! இப்படிக் கொடுமைப்பட்டுச் சம்பாதிக்கும் சில அணாக்களில், அவர்கள் ஒரு அணாவைக் கொடுத்துத் தேநீர் குடித்தால், அதில் வரி வாங்குகிறார்கள் சர்க்கார், டில்லியிலிருந்து கொண்டு. இந்த மக்களின் இத்தகைய இரத்தச் சொட்டுக்கள் — வியர்வைத் துளிகள் தான், சர்க்கார் கஜானாவில் குவியும் வரிப் பணம். இந்த எண்ணமும், வரி தரும் மக்களைப் பற்றிய பயமும் இருந்தால் ஒரு மந்திரி—அதுவும் திட்ட மந்திரி, 'முன் யோசனையின்றித் திட்டமிட்டுவிட்டோம்; அதனால் பணமும், பணத்தால் வாங்க முடியாத காலமும் பாழாயின' என்று பேசுவாரா?

இப்படிப் பேசுகிறவர்களை உடன் வைத்துக்கொண்டிருக்கும் பண்டிதரோ, 'இது போன்ற பெரும் திட்டங்களில், ஓரளவு பணம் பாழாவதைத் தவிர்க்க முடியாது' என்று கூறியிருக்கிறார்.

இது யோக்கியப் பொறுப்புள்ள ஒரு விவேகி தரும் சமாதானமா? மமதை மலையின் உச்சியில் நின்றுகொண்டு பேசுகிறார் பண்டிதர். அவரது குரலில், அகந்தை தொனிக்கிறது—இறுமாப்பு தொக்கி நிற்கிறது—தன் மூப்பு தலைதூக்கி நர்த்தனமாடுகிறது. பெரிய மனிதரே — தனது சகாக்களின் பொறுப்பற்ற போக்கைத் தட்டிக் கேட்க வேண்டியவர் — கண்டித்துத் திருத்த வேண்டியவர்—அவரே, 'தவிர்க்க முடியாது' என்று கூறுகிறார். அமைச்சர்கள் மேலும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும், ஊழல் ஊற்றுக்களான பெரிய அதிகாரிகள் மனம் மகிழவும், அவர்களை ஊக்குவிக்கும் வகையில் இருக்கிறது, பண்டிதரின் பேச்சு.

ஊழலில் ஊழலும் டில்லி சர்க்கார் திருந்தவும், அந்த டில்லியின் கங்காணிகளாக இங்கு விளங்கும் காமராசர்கள் பாடம் பெறவுமாக, அணுகிக்கொண்டிருக்கும் பொதுத் தேர்தலை மக்கள் சரியாகப் பயன்படுத்தத் தவறக்கூடாது. ஊழல்களைச் சரிவர அம்பலப்படுத்தி, அவை ஒழிய வழி காணத் தேர்தலைத் தவிர வேறு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது.

இந்தியாவின் விவசாயத் துறையில் அணுசக்தி கதிரியக்கம் பயன்படுத்தப்படுமாம்

நிலவளமற்ற பூமியில் விளைச்சல் அதிகரிக்கக்கூடுமாம்

இந்தியாவில் அணுசக்தியை மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் உபயோகப்படுத்துவதற்கு ஆரம்ப முயற்சிகள் துவக்கப்பட்டுவிட்டதாம்!

சமீபகாலம்வரையில் இப்பிரச்னையில் அதிகமாக எதுவும் செய்ய முடியவில்லையாம்; அதற்குக் காரணம், அணுசக்தி ஆராய்ச்சிக்கு அவசியமாயுள்ள கதிரியக்க சக்தியுள்ள 'ஐசோடோப்பு'கள் தாராளமாகக் கிடைக்காததும், அவைகளை உற்பத்தி செய்யும் நாடுகள் தங்கு தடையின்றி அவைகளை நமக்குத் தாராததும், அப்படியே கிடைத்த போதிலும் அவைகளின் விலை சக்திக்கு மீறியதாக இருந்ததும் தானாம்!

பம்பாயிலுள்ள 'டிராம்பே'யில் இந்தியாவின் முதலாவது அணு உலை இயங்க ஆரம்பித்தபின், இந்தியா சொந்தத்தில் கதிரியக்க சக்தியுள்ள ஐசோடோப்புகளை உற்பத்தி செய்வது சாத்தியமாகிவிட்டதாம்!

விவசாயத் துறையில் ரேடியோ ஐசோடோப்புகள் நல்ல பயன்தந்திருக்கின்றன. உதாரணமாக, நிலவளம் குறைந்த பூமிக்கு பாஸ்பரஸ் உரத்தின் வளப்பத்தை நிர்ணயிப்பதற்கு கதிரியக்க பாஸ்பரஸ் ஐசோடோப்புகள் உபயோகப்பட்டுள்ளன. முறைப்படி பூமிக்கு பாஸ்பரஸ் உரம் போட்டால் கணிசமான அளவுக்கு விளைச்சல் அதிகரிக்கக்கூடுமாம்.

மனித உடலில் பல்வேறு பொருள்கள் எவ்வித மாறுதல்களை அடைகின்றன என்பதைக் கவனிப்பதற்காகவே முக்கியமாக இந்த 'ஐசோடோப்பு'கள் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. முக்கியமாய், புற்றுநோய் கண்டுள்ள கண்ணறைகள் (செல்ஸ்) பற்றி ஆராய்வதற்கு கதிரியக்க கார்பன், பாஸ்பரஸ் ஆகியவை உபயோகிக்கப்படுகிறது.

மருத்துவச் சிகிச்சைத் துறையில் கதிரியக்க அயோடின், பாஸ்பரஸ், தங்கம் முதலிய பொருள்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அவை புற்றுநோய், தைராயிட் வியாதிகள், இரத்த வியாதிகள், சோகை முதலியவைகளைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுமென்று தெரிய வந்திருக்கிறது.

சேதி தெரியுமா?

திருச்சி, சன 16—

சனவரி 19-ந் தேதி முதல் சென்னை மாநில அமைச்சர்கள் தமது சொந்தப் பொறுப்பிலும் செலவிலுமே சுற்றுப்பயணம் செய்வதென முடிவு செய்திருக்கிறார்களாம்!

அமைச்சர்கள் தங்கள் பதவியைக் கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தவில்லை என்று பொதுமக்கள் அறிந்து கொள்ளுவதற்காக சுற்றுப்பயணத்தின்போது அவர்களுடன் அதிகாரிகள் வரவேண்டியதில்லை என்றும் உத்திரவிட்டிருக்கிறார்களாம்!

'மேற்குக் கடற்கரையில் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலை வேண்டும்'

மைசூர் முதல்வர் நிஜலிங்கப்பா கோரிக்கை

மங்களூர், ஜன. 15—

"மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் கப்பல் கட்டும் தொழிற்சாலை துவங்குவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருப்பதால், கார்வார் அல்லது பத்கல் என்ற இடத்தில் ஒரு தொழிற்சாலை துவங்குவதுபற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது; மேலும், மாநில சர்க்கார், மங்களூர் துறைமுகத்தை எல்லாப் பருவக் காலங்களிலும் பயன்படக்கூடிய துறைமுகமாக உருவாக்க வேண்டும் என்றும் கருதிக்கொண்டிருக்கிறது"

என்று, மைசூர் முதன் மந்திரி நிஜலிங்கப்பா கூறியிருக்கிறார்.

"பெரும் வியாபாரங்களுக்குப் பயன்படுகிற துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவேண்டியதின் அவசியத்தை மாநில சர்க்கார் மிகவும் உணர்ந்தே இருக்கிறார்கள்; இந்தத் துறைமுக அபிவிருத்திப் பிரச்சினையையும், மேற்குக் கடற்கரையில் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலை நிறுவும் பிரச்சினையையும் டில்லி சர்க்காரிடம் எடுத்துச் சொல்லவிருக்கிறோம்" என்றும் நிஜலிங்கப்பா கூறியிருக்கிறார்.

இரயில்வே போர்டின் புதிய உத்தரவு

கல்வியறிவு பெற்றவர்களுக்கே இனி வேலை தரப்படுமாம்

புதுடில்லி, சன. 16—

கல்வியறிவு பெற்றிராதவர்களுக்கு இனி வருங்காலத்தில் இரயில்வேயில் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ எந்தவித வேலையும் அளிக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்படுள்ளதாகத் தெரிகிறது.

இரயில்வேயில் பணியாற்றும் சிப்பந்திகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கல்வியறிவூட்ட இரயில்வே இலாகா தீவிர முயற்சியை மேற்கொண்டுள்ளதாம்.

இந்தியாவின் உற்பத்தி முறைபற்றி பண்டிதர்!

போலேபூர், சன. 16—

"இந்தியாவில் குழந்தைகள்தான் உற்பத்தி செய்யப்படுகிறதே தவிர, தொழிற்சாலைகளிலோ அல்லது வயல்களிலோ உற்பத்தி பெருகவில்லை.

"அமெரிக்கா, சப்பான், எகிப்து ஆகிய நாடுகளில் ஒரு ஏகர் நிலத்தின் உற்பத்தி இந்தியாவைப்போல இரு மடங்காக இருக்கிறது"

என்று பண்டித நேரு, டாக் பங்களாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மண்பாண்ட முறையில் மாற்றம் ஏற்படும்?

புதியவகைக் கரிசல் களிமண் உருவாக்கப்பட்டிருக்கிறதாம்!

விஞ்ஞான உதவி இப்போது கிராம மண்பாண்ட வேலைக்காரர்களுக்கும் பயன்பட்டு வருகிறதாம்!

புதிய விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் மண்பாண்ட வேலைக்கேற்ற புதிய களிமண் கலவை உருவாக்கப்பட்டிருக்கிறதென்றும், அதை வர்த்தக ரீதியில் ஏராளமாக உற்பத்தி செய்து இந்தியக் கிராமங்களிலுள்ள மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

கரிசல் மண் களியைப் பயன்படுத்திப் பழகிவிட்ட கிராம மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு இந்தப் புதிய களிமண் கலவை மிகவும் பயன்தரத்தக்கதாக இருக்கும்; அது விலை குறைவாயிருப்பதுடன், பரம்பரையான முறையில் மண்பாண்டங்களைச் செய்வதற்கேற்றபடி நெகிழ்வுள்ளதாகவும் இருக்கும். கிராமங்களில் உபயோகத்திலுள்ள உலைகளில் அவைகளைச் சுட்டெடுப்பதற்கும் அது ஏற்றது. எத்தனையோ விதவிதமான அன்றாட உபயோகப் பொருள்களை நகல முறையில் செய்வதற்கு இந்தக் களிமண் கலவை பயன்படும்.

இலட்சியம் அதுதான்!

எப்பொழுதும் 20 இலட்சம் டன் உணவுத் தானியங்களைக் கையிருப்பில வைத்திருக்க ஏற்பாடு செய்வது இந்தியாவின் இலட்சியமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

உற்பத்தி உயர்வாம்!

இந்தியாவில், கனி இரும்பு உற்பத்தி, 1956 ஆகஸ்ட் மாதத்தில 3,18,583 டன்னாக இருந்தது 1956 செப்டம்பரில 3 32,014 டன்னுக்கு உயர்ந்துவிட்டதாம.

இந்து மதம் கரைகிறது!

காசி, சன. 16—

'ஜாதவ்' என்ற பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுமார் 3,30,000 பேர் கடந்த ஞாயிறன்று ஆக்ராவில் புத்தமதத்தைத் தழுவியுள்ளதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

கல்வி முறை பற்றி கண்டனக் குரல்

நன்மைக்குப் பதில் தீமைதான் ஏற்படுகிறதாம்!

புதுடில்லி, சன. 16—

'இந்தியக் கல்வி முறை பற்றித் தீவிரமாகக் கண்டிக்கும் வேலையில் பொறுப்புள்ள நபர்களும் ஈடுபடுகிறார்கள். அவ்வாறு அவர்கள் ஈடுபடுவதால், நன்மை ஏற்படுவதற்கு மாறாகத் தீமைதான் ஏற்படுகிறது. அதனால பொதுமக்களுக்குக் கல்விமீது இருக்கவேண்டிய மதிப்புப் போய்விடுகிறது"

என்று இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் ஆசாத், கல்வி மத்திய ஆலோசனை நிறுவனத்தின் மாநாட்டில் கூறியுள்ளார்.

அங்கேரி மேயருக்கு மரண தண்டனை

புரட்சியில் ஈடுபட்டவராம்

புடாபெஸ்ட், சன. 15—

அங்கேரி புரட்சித் தலைவர்களில் ஒருவரும், மேயராகப் பணியாற்றிய வருமான ஜோசர் டோஸ் என்பவருக்கு இரகசிய விசாரணைக்குப் பிறகு நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்திருப்பதாகவும், இன்னும் சிறிது நாட்களில் அவர் சுட்டுக் கொல்லப்படுவார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

இராகுட் அணைகட்டில் உயிர் துறந்தவர்கள்!

சலவைக் கல்லில் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டதாம்!

சம்பலூர், சன. 16—

எட்டு ஆண்டுகளாக நடைபெற்ற இராகுட் அணைக்கட்டு வேலையில் பணிபுரிந்து உயிர்நீத்த 128 தொழிலாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை இந்தியப்பேரரசின் திட்ட மந்திரி குல்சாரிலால் நந்தா திறந்து வைத்தார்.

32 அடி உயரமுள்ள அந்த நினைவுச்சின்னம் சலவைக் கல்லால் உருவாக்கப்பட்டிருக்கிறதாம்.

ரஷ்யாவுக்கு 11,000 டன் மிளகு ஏற்றுமதியாகிறது

கொச்சி, சன. 16—

கொச்சி துறைமுகத்திலிருந்து 11,000 டன் மிளகும், தேயிலையும் கப்பலில் ஏற்றப்பட்டு ரஷ்யாவுக்கு அனுப்பப்படுவதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

கழகச் செய்திகள்

வெள்ளமடம் தி. மு. கழக அமைப்பு

21—12—56 மாலை 4½ மணிக்கு நாஞ்சில் மாவட்டம் வெள்ளமடம் தி மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ஏ. இராமசாமி தலைமையில் கிளைக் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வி எம். ஜான், கழகத்தின் நோக்கம், தோழர்கள் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் பற்றி விளக்கிப் பேசினர்.

பின்னர் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் செயலாளர்: ஏ. நடராசன்; துணைச் செயலாளர்: பி. சனார்த்தனம்; பொருளாளர்: சி. மாதேவன்; மாவட்டப் பிரதிநிதிகள்: எம். அல்போன்ஸ், எம். குமாரசாமி மேற்கண்ட நிர்வாகிகள் உட்பட 11 செயற்குழு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனா. பின்னர் சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறறப்பட்டன.

தொட்டணம்பட்டியில் கழகப் பொதுக்கூட்டம்

12—12—56ல், மதுரை மாவட்டம் தொட்டணம்பட்டியில் தி. மு. கழகச் சார்பில் தோழர் சு. முத்துப்பாண்டி தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ரா. பட்டனி, கொ. இராமசாமி ஆகியோர் பேசினர் தி மு. கழகத் தேர்தல் நிதிக்காகப் பொதுக்கூட்டத்தின்போது ரூ. 10 கொடுக்கப்பட்டது.

சத்திரப்பட்டி :

16—12—56 காலை, சத்திரப்பட்டியில் தி. மு. கழகப் படிப்பகத் திறப்பு விழா நடைபெற்றது. வீதிகள் தோறும் கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பிரம்மபுரம்

25—12—56 அன்று வ. ஆ மாவட்டம் பிரம்மபுரத்தில், தி மு கழகக் கிளை துவக்கவிழா, தோழர் வேலம் தம்பிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி சிற்றரசு கொடியேற்றி வைத்தார் பெருமழை பிடித்துக்கொண்ட போதிலும், கூடியிருந்த ஏரானமான பொதுமக்கள் குடைகள் பிடித்துக்கொண்டும், மழையில நனைந்துகொண்டும் கருத்துரை கேட்டு விழாவைச் சிறப்பித்தனர்

காட்டுப்பாடி

23—12—56 பகல் 2½ மணிக்கு வ. ஆ. மாவட்டம் காட்டுப்பாடி இம்பீரியல் தியேட்டரில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக, 'இரத்தக் கண்ணீர்' திரைப் படக் காட்சி நடைபெற்றது. வசூலான ரூ. 201-ம் தேர்தல் நிதிக்காக வழங்கப்பட்டது. இந்நிதி திரட்டும் பணியில் சுரிகிரி, கல்புதூர், பிரம்மபுரம் தி மு. கழகக் கிளைகள் பெருமளவில் உதவி செய்தன.

இலங்கை

30—12—56 மாலை 5 மணிக்கு, கொழும்பு செம்பட்டா வீதி, எண் 140 இலலம் கழகப் பணிமனையில், தோழர் இரா. அதி மணி தலைமையில் இலங்கை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறறது. அக்கூட்டத்தில் டாக்டா அம்பேத்கார், இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தத தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய்—தாராவி

30-12-56 இரவு 7½ மணிக்கு, பம்பாய்—தாராவி தி. மு. கழக முன்னாள் நிர்வாகிகளுக்கு 'திராவிடரகத்'தில் தோழர் எல். என். செழியன் தலைமையில், பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது தோழர்கள பி. எஸ் செல்லையா, பி. எஸ். கலைச்செல்வன், டீ. அ. செல்லையா, பி. எஸ். எஸ். பாண்டியன், கா. சு. மாடசாமி ஆகியோ பாராட்டுரை வழங்கினர். அவர்களுக்கு புத்தகங்கள் பல அன்பளிப்பாகத் தந்ததுடன், அனைவருக்கும் சிற்றுண்டி, தேநீர் வழங்கப்பட்டது. தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு முன்னாள் நிர்வாகிகள் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

* * *

3—1—57 இரவு 8-மணிக்கு, திராவிடரகத்'தில் தோழர் பி. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், ஆகஸ்ட் 56-முதல் நவம்பர் 56 வரையுள்ள கிளைக்கழக வரவு செலவுகள் ஒப்படைக்கப்பட்டன 'முயற்சி' மலர் விற்பனை குறித்தும் முடிவெடுக்கப்பட்டது. மேலும் கழக உறுப்பினரல்லாத வெளித் தோழர்கட்கு முன்பணமாக ரூ. 2 பெற்றுக்கொண்டு புத்தகங்கள் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன், சில அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தாயில்பட்டி, சிவகாசி, பேராபட்டியில் கழகப் பொதுக்கூட்டங்கள்

தாயில்பட்டியில் 1-1-57 அன்று தோழர் வே. கருணாகரன் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர், தி. மு. கழக ஆக்க வேலைகள், தற்கால அரசியல் நிலைமை, தேர்தல்கள் குறித்துப் பேசினர்.

அன்று சிவகாசி நகர் சிவன் கோயில்முன் தோழர் ஏ. எஸ் கனி தலைமையில் நடைபெற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஏ கே. வில்வம், தோழியர் அருண்மொழி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பேராபட்டி கிராமத்தில் தோழர் என். சக்கரையப்பன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஏ. கே. வில்வம், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசினர்.

களக்குடி

2—1—57 இரவு 7-மணிக்கு, பாண்டியன் திடலில், தோழர் கோ. இராசமணி தலைமையில் தி மு. கழகக் கிளை துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் பி. பத்மநாபன் கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர். தோழர்கள் வெ. திருப்பாற்கடல், என். சங்கரலிங்கம், எம் எஸ். அரியமுத்து, கே. ஆர். பி. மணிமொழியன் ஆகியோர் பேசினர்.

முதுகுளத்தூர்

1-1-57 அன்று முதுகுளத்தூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் ஆர். எம். அலியார் தலைமையில் நடைபெற்றபோது இரங்கூனிலிருந்து தாயகம் திரும்பின தோழர் ஏ. என். எச். யாசீனுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. வரவேற்புக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட தோழர் யாசீன், கழக வளர்ச்சிக்கு ஓராண்டு 'நம் நாடு' சந்தா நன்கொடை தருவதாக வாக்களித்தார் இறுதியில சில அனுதாபத தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குரும்பப்பட்டி

3—1—57ல், வி. எஸ். குரும்பப்பட்டி தி. மு. கழகச் சார்பில் தோழர் பழனியாண்டி தலைமையில நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் எம். பி. ஜெயராஜ் 'தென்னவரின் ஒற்றுமை' குறித்துப் பேசினர்.

எருமைப்பட்டி

3—1—57ல், எருமைப்பட்டி தி மு. கழகப் புதிய நிர்வாகிகள் தேர்தல் தோழா எச். எல். முருகேசன் தலைமையில் நடைபெற்றது செயலாளர் : கே இராதாகிருஷ்ணன்; துணைச்செயலாளர்: நடராசன்; பொருளாளர்: சுப்பு; மாவட்டப் பிரதிநிதி: தர்மலிங்கம் மற்றும் செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கூட்டத்தின்போது, முட்டாஞ்செட்டி தி. மு கழகக் கிளை எருமைப்பட்டி கிளைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. பின்னர், தி. மு. கழகத் தேர்தல் நிதி வசூலிக்க 5 பேரடங்கிய வசூல் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

நல்லூர்

5—1—57 இரவு 8 மணிக்கு, நல்லூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் மு சுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகளும் செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் : க. சுப்பராயன்; துணைச் செயலாளர்: வை. ஆறுமுகம்; பொருளாளர்: மு. சுந்தரம்; மாவட்டப் பிரதிநிதி த. அரங்கநாதன். பின்னர், கழகத்திற்கென பணிமனை அமைக்கும்வரை வேறொரு கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும் அதற்கான வேலைகளை மேற்கொள்ள செயலாளருக்கு அதிகாரம் வழங்கியும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

துவக்க விழா

6—1—57 இரவு 7½ மணியளவில் மேற்படி கிளைக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், வானொலி திடலில் தோழர் வை. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தோழர் குப்புசாமி கழகக் கொடியேற்றிவைத்துச் சிறிது நேரம் பேசினர். பின்னர் தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், த. அரங்கநாதன், ம. பொன்னம்பலம் ஆகியோர், திராவிடநாடு பிரிய வேண்டிய அவசியம் குறித்தும், டில்லி சர்க்கார் தென்னாட்டிற்கு இழைத்துள்ள அநீதிகளை விளக்கியும, தேர்தலில் கழகத்தைப் பொதுமக்கள் ஆதரிக்க வேண்டிய அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர். பல கிளைக் கழகங்கள் சார்பில் சொற்பொழிவாளர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நன்றியறிவிப்பு

'நம் நாடு' ஆசிரியர்களுக்கும் நிர்வாகக் குழுவினருக்கும் நடேங்கிலுமுள்ள தோழர்களும் வாசகர்களும் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பி மகிழ்வித்தனர்; அவர்களுக்கெல்லாம், இதயங் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

—'நம் நாடு' அலுவலகத்தார்

* * *

"14-1-57-ல் சென்னை மயிலையில் நடைபெற்ற திராவிடர் திருநாள் விழாக் கூட்டத்திற்கு, அழைப்பினை ஏற்றுக் கலந்துகொண்டு சிறப்பித்த பொதுச்செயலாளர் அவர்களுக்கும், கழகச் சொற்பொழிவாளர்களுக்கும், நாயனம் வாசித்த திரு. மாசிலாமணி குழுவினருக்கும, சிலம்பம் விளையாடிய ஜிக்கி விளையாட்டுக் குழுவினருக்கும், இன்னிசை விருந்தளித்த தோழியர் வசந்தவல்லி குழுவினருக்கும், ஏற்றுக்கொண்ட பொறுப்புகளைத் திறம்பட நடத்திய 50-வது வட்டத் தி மு கழகத்தினருக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

* * *

"தி மு. கழகத் தேர்தல் நிதிக்கென, கரூர் பஞ்சாலைத் தொழிலாளர்கள் ரூ. 52-12-0 வசூலித்து, அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் நிதி வழங்கிய ஆலைத் தொழிலாளர்கட்கும், என்னுடனிருந்து நிதி வசூலில் பணியாற்றின தோழர்கள வி சிதம்பரம், விஸ்வநாதன ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று கரூர் தி. மு. கழகச் செயலாளர் எம். கே. கரிகாலன் அறிவிக்கிறார்.

பாராட்டுக் கூட்டம்

22—12—56ல், குளூர்-வள்ளுவர் படிப்பகத்தில் வியாபாரிகள்—விவசாயிகள் - தொழிற்சாலை அதிபர்கள் சார்பில், 32 ஆண்டுகள் தொடர்ச்சியாக குளூர் டைராட்சி அலுவலகத்தில் தலைமைக் குமாஸ்தாவாகப் பணியாற்றிய திரு. எஸ். ஆர். சுப்பராவ் அவர்களுக்கு, மேற்படி பணி முடிவுற்று ஓய்வு பெறுவதையொட்டி தேநீர் விருந்தும் பாராட்டுக் கூட்டமும் நடத்தி வைக்கப்பட்டது. அந்நிகழ்ச்சியில் தோழர்கள் எஸ். வி. இராமசாமி, செ. கா. சின்னச்சாமி, எஸ். வி. இலட்சுமணன், பெ. மருதாசலம், குளூர் போஸ்ட் மாஸ்டர் செல்லராசு, கண்ணன், எஸ். கே. சண்முகசுந்தரம், டி. ஆர். திருவேங்கடசாமி, எஸ். என். அற்புதசாமி ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்கள். இறுதியில் திரு. சுப்பராவ் அவர்கள் தமக்களிக்கப்பட்ட விருந்து உபசாரணைகளுக்கும் பாராட்டுதலுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பெங்களூர்-இலக்குமணபுரி

6—1—57 காலை 11½ மணியளவில், தோழர் ஆர். முனுசாமி தலைமையில கிளைக் கழக இல்லத்தில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் மு அண்ணாமலை அவர்களின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் சில அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அம்மன்பேட்டை (தஞ்சை மாவட்டம்)

6—1—57 மாலை 5 மணிக்கு, கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் மீ. சண்முகவேல் தலைமையில் நடைபெற்றபோது, 'தேர்தலும் நாமும்' என்ற தலைப்பில் தோழர்கள் ஏ. பி. நாராயணசாமி, எஸ். தியாகராசன், எஸ். ஏகாம்பரம், வி. முருகானந்தம் ஆகியோர் பேசினர். பின்னர் கழகப் புதிய செயற்குழுவும் அமைக்கப்பட்டதுடன், சில அனுதாபத் தீர்மானகளும் நிறைவேறறப்பட்டன.

கீழ்ப்பாலூர் :

6—1—57 இரவு 8 மணிக்கு தோழர் எஸ். இலக்குமணன் கடையில தோழாகள் ஏ. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற கிளைக கழகச் செயற்குழுக் கூட்டத்தில், முக்கிய சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பெங்களூர்—இலட்சுமி நாராயணபுரம் :

6—1—57 காலை 9½ மணிக்கு கிளைக் கழக இல்லத்தில் தோழா க. சீதாராமன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுஉறுப்பினா கூட்டத்தில், மேற்கொண்டு மூன்று செயற்குழு உறுப்பினர்களும், சொற்பயிற்சிச் செயலாளராகத் தோழர் மு. தண்டாசலமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விரைவில் தி.மு. கழகத் தேர்தல்நிதி வசூலித்து அனுப்புவதென்றும்,மற்றும் சில அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சேலம்

6—1—57 காலை 10-மணிக்கு, நடைபெற்ற சேலம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில் 1-1-56 முதல் 31-12-56 வரையுள்ள கழக வரவு செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

அருப்புக்கோட்டை

6—1—57 இரவு 8-30 மணிக்கு அருப்புக்கோட்டை பெரிய கடைவீதியில தி. மு. கழக உட்கிளை அமைப்புக் கூட்டம், தோடித் திடலுக்கு அருகிலுள்ள பணிமனையில் தோழர் சுந்தரராசன் தலைமையில் நடைபெற்று நிர்வாகிகளும் செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனா. செயலாளர் : பி. பி. என். நல்லதம்பி, துணைச்செயலாளர் : ப. ச. செல்லசாமி, பொருளாளர் : பூ. வ. ச. மு. நடராசன்.

பம்பாய்—கம்பாலா ஹில்

7—1—57 இரவு 10-மணிக்கு, 'பெமினோ'வில், தோழர் கை. சுப்பையா தலைமையில் கிளைக் கழக மாதாந்திர உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது, கழக வரவு செலவுகள், தேர்தல் நிதி வசூல் வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. தோழர்கள் விசயமன்னன், அன்பழகன், நவுகன் ஆகியோர சொற்பொழிவாற்றினர். இறுதியில் சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏழுமலை

8—1—57-ல் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. சு. தங்கராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் கு. பரமசிவம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தேர்தல்நிதி வசூல் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

நாகூர்

14—1—57 இரவு 12 மணியளவில் நாகூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், 'கூட்டுறவு நியா' இல்லத்தில் தோழர் சந்தானம் தலைமையிலும், தோழர் மு. கருணாநிதி முன்னிலையிலும் நடைபெற்றபோது, கிளைக்கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் : க. மாரியப்பன் ; துணைச்செயலாளர் : இரா. முருகேசன்; மாவட்டப் பிரதிநிதி ; இராமதாஸ். தோழர் நடராசன் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.பின்னர் தோழர்கள் மு. கருணாநிதி, ஜி பராங்குசம், சித்திரவேலு, பெருமாள், பாண்டியன் ஆகியோர் பேசினர்.

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

தி. மு. கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி. மு.க' என்ற எழுத்துக்களும், கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணா 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது. வெளியூர்க்கிளைகள் 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை 24—12—56 —தலைமைக் கழகம் (தி. மு. க.)

தேர்தல் நிதி தாரீர்!

	ரூ. அ. பை
வரவு :	
முன் (15—1—57) இதழ்ப்படி	44,899—6—7

9—1—57 அன்று சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில், அண்ணா, பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட திராவிடத் தாய்மார்கள் நிதி அளிப்புக் கூட்டத்தில் 1,921 11 0

விவரம் :

திராவிடத் தாய்மார்கள்	1,011	2	3
சென்னை பஸ் போக்குவரத்து தொழிலாளர்கள்	333	0	0
சென்னை ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்கள்—உரிமையாளர்கள்	147	0	0
11-வது வட்டத் தி. மு. க.	101	0	0
சௌத் இந்தியா ஆட்டோ மோடிவ் கார்ப்பொரேஷன் லிமிடெட்	60	8	0
சென்னை டி. யூ. சி. எஸ். தொழிலாளர்கள்	55	0	0
சென்னை கிளான் அண்டு பெயரல் தொழிலாளர்கள்	32	2	0
டாக்டர் நடேசனுர் மன்றம்	40	0	0
டயோசிசன் அச்சகத் தொழிலாளர்கள் சார்பில்	26	12	0
தோழர் கபாலி 44-வது வட்டம்	8	11	6
அருணாசலம்—இராமசாமி (குழந்தை மலர்க்கொடி)	10	0	0
தென்-சென்னை முடிதிருத்தும் தொழிலாளர்கள்	7	9	0
இராயப்பேட்டை ராசா பவர் பிரஸ் தொழிலாளர்கள்	17	6	0
சென்னை நடைபாதை வியாபாரிகள்	14	0	0
மயிலை அறிவுவளர்ச்சி மன்றம்	5	0	0
மாணவி மல்லிகா	2	5	6
பொன்முடி (42-வது வட்டம்)	1	9	3
ஜே. கனகசபை, தையல் தொழிற்சாலை, சாந்தோம்	8	11	6
மெரினா கடற்கரை வியாபாரிகள்	7	3	0
கன்னியப்பன் 39-வது வட்டம்	0	9	9
இராமசாமி 2-வது வட்டம்	1	0	0
காளிமுத்து செல்வம் (எம். ஜி. ஆர். குழு)	5	0	0
சேலை ஒன்று ஏலம் விட்டதில்	20	0	0
சாரதா-மோகன் 5-வது வட்டம்	2	0	0
எஸ். எஸ். இரத்தினம்	1	1	3
செங்குட்டுவன் (பெயர் சூட்டல்)	1	0	0
பாண்டியன் "	1	0	0
8-வது வட்டத் தி. மு. கழகத் தோழர்	1	0	0

14—1—57 அன்று சென்னையில், மாவட்டக் கழகச் சார்பிலும், 50-வது வட்டத் தி. மு. கழக ஆதரவிலும் நடைபெற்ற திராவிடர் திருநாள் கூட்டத்தின்போது பொதுச்செயலாளரிடம் ... 244 4 0

விவரம் :

44-வது வட்டத் தி. மு. க.	151	0	0
இராயப்பேட்டை முத்தமிழ் நாடக மன்றம்	14	4	0
ராபின்சன்பேட்டை வி. எம். ராமகிருஷ்ணன்	1	0	0
டி. வில்லியம், டொரமி குப்பம்	1	0	0
தோழர் இராசு 47-வது வட்டம்	1	0	0
திராவிடமணி திருவல்லிக்கேணி	1	0	0
50-வது வட்டத் தி. மு. க.	75	0	0

பூவிருந்தவல்லியில் (செங்கற்பட்டு மாவட்டம்) 15—1—57 அன்று அண்ணா அவர்களும் கழகத் தோழர்களும் நடித்த 'சந்திரோதயம்' நாடகத்தின் மூலம் 1,500 0 0

மேற்படி நாடகத்தன்று மூன்றும் கட்டளைத் தி. மு. கழகம்	34	7	0
மேற்படி நாடகத்தன்று ஆலப்பாக்கம் தி. மு. க.	51	5	6
15—1—57-ம் நாள் இதழ் மொத்தத் தொகை கூட்டலில் விடுபட்டுப்போன தொகை	100	0	0

ஆக மொத்தம் ரூ. 48,751—2—1

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

****

19—1—57-ல்!

★

தி. மு. கழக அபேட்சகர்கள் முதல் பட்டியல்

★

சென்னை 19—1—57 (வெளியூர் 20-1-57) 'நம் நாடு' இதழில் வெளிவருகிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க)

****

கழகக் கூட்டங்கள்

★

சேலம் :

(19-வது வட்டம்)
பிள்ளையார் கோவில் தெருவில்
21—1—57 மாலை 7 மணிக்கு
தலைவர் : பி. வி. இரங்கையா
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். ஏ. அன்புக்கரசு
கே. ஆர். மாசிலாமணி

★

திருவள்ளூர் :

சிவன் கோயில் முன்பு
20—1—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : மா. கல்யாணசுந்தரம்
பேசுவோர் :
எம். எஸ். கோவிந்தராசன்
டி. ஆர். வரதன்
வி. எஸ். கோவிந்தராசன்

★

நகர் :

(லால்குடி வட்டம்)
நகர் பள்ளி மைதானம்
20—1—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் : கு. ஆ. பெரியசாமி
பேசுவோர் :
கா. அப்பாதுரையார்
அன்பில் தர்மலிங்கம்
எஸ். நெடுமாறன்

தெ. ஆ. மாவட்டக் கழக உறுப்பினர்கட்கு:

"20-1-57 காலை 10 மணிக்கு, விழுப்புரம் டவுன் கீழ்பெரும்பாகம் தோழர் எம. சண்முகம் இல்லத்தில், தெ. ஆ. மாவட்டப் பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும். தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டுதல், பொதுத்தேர்தலில் நமது பணி, மற்றும் சில முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்"

என்று தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அறிவிக்கிறார்.

தி. மு. க. தேர்தல் நிதி

அளிப்புப் பொதுக்கூட்டம்

19—1—57 மாலை 6-மணிக்கு, சென்னை—திருவொற்றியூர் சன்னதித் தெருவில், திருவொற்றியூர் தி. மு. கழகம், துணை நிறுவனங்கள், பல தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் தோழர் டி. கே. பழனிச்சாமி தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் முசவை ஆர்.எஸ். பாண்டியன் மாணவி எஸ். பி. சற்குணம் பேசுவர்.

தி. மு. கழகத் தேர்தல் நிதி நாடகம்

21-1-57 இரவு 10 மணிக்கு, திருச்சி நகர தி. மு. கழகச் சார்பில் திருச்சி தேவர் மன்றத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக அண்ணா, மற்றும் கழகத் தோழர்கள் நடிக்கும் 'சந்திரோதயம்' நாடகம் நடைபெறும்.

தி. மு. க. தேர்தல் நிதிக்கு சிறப்புக் காட்சி

20—1—57 காலை 10-மணிக்கு சென்னை 30-வது வட்ட கிளையின் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காகக் கெயிட்டி தியேட்டரில் புரட்சி நடிகர் எம் ஜி இராமச்சந்திரன் நடித்த 'குலேபகாவலி' திரைப்படக் காட்சி தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும்.

இலங்கை வானொலியில் டி. கே. சீனிவாசன்

இலங்கை வானொலி நிருபருக்கும் தோழர் டி. கே. சீனிவாசனுக்கும் நடைபெற்ற பேட்டி 19—1—57 சனி இரவு 7-45 மணிக்கு, இலங்கை வானொலியின் 'தேசிய சர்வீசில்' 344·8 மீட்டரிலும், 60·42 மீட்டரிலும் ஒலிபரப்பப்படும்.

எஸ். எஸ். ராசேந்திரன்

நாடக மன்ற நிகழ்ச்சிகள் :

20 : சின்னமனூர்
22 : சின்னாளபட்டி
23 : மேலூர் (மதுரை)
24 : பாலக்காடு
30 : கள்ளக்குறிச்சி (தெ.ஆ.)

'கோமதியின் காதலன்'

சென்னை லாயிட்ஸ் பாங்கி ஊழியர் பொழுதுபோக்குச் சங்கத்தின் சார்பில், ஊழியர்கள் நடிக்கும் 'கோமதியின் காதலன்' என்ற தமிழ் நாடகம் 19—1—57 மாலை 6 மணிக்கு ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறும்.

திருச்சியில் சிறப்புக் கூட்டம்

20—1—57 காலை 9 மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில், திருச்சி பெரிய கடை வீதி, தி. மு. கழகக் கிளை சார்பில் தோழர் பா. பாண்டுரங்கன் தலைமையில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, கண்ணதாசன் பேசுவர். தோழர் நாகூர் அனிபா அவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும். கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வழங்கப்படும்.

பொதுக்கூட்டம்

அன்று மாலை 6 மணிக்கு, திருச்சி டவுன் ஹால் முன் கழகச் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டமும், இரவு 10 மணிக்கு, பெரிய கடை வீதி கிளைக் கழகத்தின் முன் நாகூர் அனிபா அவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

லால்குடியில் உதவி நிதி அளிப்புக் கூட்டம்

21—1—57 மாலை 5 மணிக்கு லால்குடி சிவன்கோயில் முன்பு, கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் துறந்த லால்குடி நடராசன் குடும்பத்தாருக்கு, லால்குடி தி. மு. கிளைக் கழகச் சார்பில் தோழர் அன்பில்-தருமலிங்கம் தலைமையில் உதவி நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அண்ணா, என். வி. நடராசன், அ. பொன்னம்பலனர் ஆகியோர் பேசுவர்.

ஆடுதுறை தொகுதி தி. மு. கழகத் தோழர்கட்கு:

20—1—57 மாலை 3 மணிக்கு மேலக்காட்டூர் மெயின் ரோடிலுள்ள முத்தமிழ் நாடக மன்றக் கட்டடத்தில் தோழர் பொ. தருமன் தலைமையில் ஆடுதுறை தொகுதி தி. மு கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேர்தல் பிரச்சாரக் குழு அமைத்தல், தொகுதி தி. மு. கழகச் செயற்குழு அமைத்தல், மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்குவரும். தி. மு. கழகத் தோழர்களும் உறுவார் முன்னேற்றக் கழகத் தோழர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திருமணங்கள்

20—1—57 காலை 9 மணிக்கு, இணைக்கனூர் மணமகன் இல்லத்தில், தோழர் வி. வாசவன் — தோழியர் மரகதம் திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

20—1—57 காலை 9 மணிக்கு, கோவை பெரியநாயக்கன்பாளையத்தில் தோழர் கி. தேவராசு—தோழியர் பெ. ரங்கநாயகி திருமணம் நடைபெறும். திரு. மே. கி. நம்பாளர், மு. இராமநாதன், தங்கமாணிக்கம், கு. சி. செங்கின்னி வாழ்த்துரை வழங்குவர்.

பெங்களூர்—சீராமபுரம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

20—1—57 காலை 9½ மணிக்கு, கிளைக் கழகப் பணிமனையில், கிளைச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும் முக்கியப் பிரச்சினைகள் பல ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படும்.

****

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு!

மதுரை தமுக்கம் திடல் திறந்தவெளி அரங்கில்

20—1—57 ஞாயிறு அன்று மாலை 6-30 மணிக்கு

★

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

கட்டணம் : ரூ. 25, 10, 5, 3, 2, 1.

குறிப்பு :—பெண்களுக்குத் தனி இடம் உண்டு. நாடகத்திற்கு முன்னும் பின்னும் பஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

****

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.